Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    மார்கழி ப5    (20-12-1992)    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 306

## விசேடசிகிச்சை பெறவுள்ள நோயாளர் பெரும் அவதி

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்பொழுது கடும் நோயினால் பீடிக்கப்பட்டோர்கள் விசேட சிகிச்சைக்கென கொழும்புக்குச் செல்ல முடியாமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது. புற்றுநோய் மற்றும் நீரிழிவு போன்ற மிகவும் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகின்றது. இப்படியான நோயாளர்கள் வழமையாக கப்பல் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்படுவர். இருந்தும் சென்றமுறை ''குமண'' கப்பலில் நோயாளர் எவரும் ஏற்றிச் செல்லப்படவில்லை. எனினும் தற்பொழுது மிக (4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிக்கடலில்கடும்சண்டை:

# பீரங்கிப்படகுகள் விரட்டியடிப்பு

## கடற்புலிகளின் துணிகரத் தாக்கு

(கிளாலி)

கிளாலிக் கடற்பரப்பில் படகுகள் மீது தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப் படகுகளைக் கடற்புலிகள் விரட்டியடித்தனர். நேற்று முன்தினம் நள்ளிரவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் படகுகளே இத் துணிகரத் தாக்குதலை மேற்கொண்டு கடற்படையினரை துரத்தியடித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களாக சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகுகளும், அதிவேகரோந்து படகுகளும் கிளாலிக்கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது திடீர் தாக்குதல்களை நடத்தி வருவது தெரிந்ததே. இதில் பலர் கொல்லப்பட்டும் பெருமளவு பொருள்கள் மூழ்கடிக்கப் பட்டும் உள்ளமை தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து கிளாலிக் கடலில் விடுதலைப்புலிகள் தற்பொழுது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நேற்றுமுன் தினமிரவு நோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் கடற்சண்டை ஒன்று மூண்டதாகத் தெரிய வருகின்றது. கடற்பரப்பில் நடந்த இம்மோதல் அப்பகுதியின் கரையோரப் பகுதி எங்கும் கேட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இம்மோதலின்போது சிறிலங்கா கடற்படையினர்பீரங்கிகளையும், இயந்திரத்துப்பாக்கி [4ஆம் பக்கம் பார்க்க]

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வலிவடக்குப் பகுதி மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பரவலான எறிகணைத் தாக்குதல்களையும் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறுபகுதியில் சகஜ நிலை திரும்பியது

(வடமராட்சி)

தொண்டமானாறு, இடைக்காடு மற்றும் பகுதிகளில் தற்போது சகஜ நிலை ஏற்பட்டுள்ளதையடுத்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ளன.

இராணுவ தாக்குதலினால் இடம் பெயர்ந்த மக்களினது உடைமைகள் பொருள்களை பாதுகாத்து திருடர்களின் நடமாட்டத்தை அவதானிக்கும் நோக்கில் வல்வெட்டித்துறை காவல் துறையினர் தொண்டமானாறு பகுதியில் தற்காலிக நிலையம் ஒன்றை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (யோ)

## மட்டு மாவட்டத்தில் இருபாரிய முகாம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப்பகுதியில் இரண்டு பாரிய இராணுவ முகாம்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

நாவிலங்காடி சேனையில் கடந்த திங்களன்று ஒரு முகாமும், அம்பிளாந்துறையில் கடந்த புதனன்று ஒரு முகாமும் அமைக்கப்பட்டு அங்கு பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மிகப் பாரிய முகாம்களாக இவை அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பலாலி ராணுவ நடவடிக்கை தாக்கி மீளும் புதிய யுக்தியாம்

(கொழும்பு)

பலாலி முகாமின் கிழக்குப் புறமாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை தாக்கிவிட்டு மீளும் யுத்த தந்திரோபாயம் என சிறிலங்கா இராணுவ வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள சில பகுதிகளைக் கைப்பற்றி முகாமிற்குக் கொண்டுவரும் இராணுவ திட்டத்தை மாற்றி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் புலிகள் மீது தாக்குதல் நடாத்திவிட்டு இராணுவ முகாமிற்குத் திரும்பும் புதிய யுத்தியை இராணுவம் கைக்கொள்ளத் தொடங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதன் ஒரு அம்சமாக ஹெலிகப்டர் சகிதமும் தொண்டமனாறு பகுதியில் கப்பல்படையும் தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தரைப்படை கப்பற்படை வான்படை என முப்படைகளும் ''ரணகண்டர்'' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதாக இராணுவ

## பரீட்சை விடைத்தாள்கள் நாளை அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7-ம் திகதி தொடக்கம் 17-ம் திகதி வரை நடைபெற்ற க. பொ. த (சா. த) பரீட்சையின் விடைத்தாள்கள் நாளை கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புதிதாகப் பருத்தித்துறைதுறைமுகத்திற்குஎடுத்துவரப்படவுள்ள இரண்டு இழுவைப் படகுகளைக் கொண்டுவருகின்ற கப்பலிலேயே இவ் விடைத்தாள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (பா)

## கடல் வளம் சார் கல்வி

## புலிகளை அகற்றியபின் கிழக்கில் தேர்தலாம்

(கொழும்பு)

வடக்கை கைவிட்டு கிழக்கில் இராணுவ நடவடிக்கையை துரிதமாக்கி அங்கிருந்து புலிகளை அகற்றிய பின் கிழக்கில் தேர்தலை நடாத்துவதே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் திட்டம் என கொழும்பு தமிழ் குழுக்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் தேர்தலை நடாத்துவதற்குரிய சூழ்நிலையை உடனடியாக உருவாக்கும்படி கூட்டுப்படை தலைமைத் தளபதி ஹமில்டன் வனசிங்காவிற்கு ஏற்கனவே பிரேமதாசாவால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காகவே தெரிவுக்குழுவை விரைவில் முடித்துக்கொள்ள பிரேமதாசா விரும்பியுள்ளதாகவும் அக்குழுக்கள் மேலும் தெரிவித்தன.

சமஷ்டி அமைப்பை உருவாக்குவதன் மூலம் தேர்தலில் தோல்வியடைய பிரேமதாசா விரும்பவில்லை எனவும் அவை தெரிவித்தன.

## இடம் பெயர்வோர் நலன் விசேட கூட்டத்தில் ஆராய்வு

(சுன்னாகம்)

இராணுவ அனர்த்தங்களை உதவி அரச அதிபர் பிரிவில், உ. அ. அதிபர் தலைமையில்

திடீர் தாக்குதல்களை நடத்தி வருவது தெரிந்ததே. இதில் பலர் கொல்லப்பட்டும் பெரு

கள் தற்பொழுது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித் துள்ளதாகவும் அங்கிருந்து

புலிகளுக்கும், சிறிலங்கா இரா ணுவத்தினருக்கும் இடையில் கடும் கடற்சண்டை ஒன்று

தாகவும் அப்பகுதி மக் கள் தெரிவிக்கின்றனர்.

இம்மோதலின்போது சிறி லங்கா கடற்படையினர்பீரங்கி களையும், இயந்திரத்துப்பாக்கி

[4ஆம் பக்கம் பார்க்க]

# கிழக்கில் தேர்தலாம்

(கொழும்பு)

வடக்கை கைவிட்டு கிழக்கில் இராணுவ நடவடிக்கையை துரிதமாக்கி அங்கிருந்து புலி களை அகற்றிய பின் கிழக் கில் தேர்தலை நடாத்துவதே சிறிலங்கா ஜனாதிபதி பிரேம தாசாவின் திட்டம் என கொழும்பு தமிழ் குழுக்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் தேர்தலை நடாத் துவதற்குரிய சூழ்நிலையை உடனடியாக உருவாக்கும் படி கூட்டுப்படை தலைமைத் தள பதி ஹமில்டன் வனசிங்கா விற்கு ஏற்கனவேபிரேமதாசா வால் கட்டளை பிறப்பிக்கப் பட்டுள்ளதாகவும், இதற்கா கவே தெரிவுக்குழுவை விரை வில் முடித்துக் கொள்ள பிரே மதாசா விரும்பியுள்ளதாகவும் அக்குழுக்கள் மேலும் தெரி வித்தன.

சமஷ்டி அமைப்பை உருவா க்குவதன் மூலம் தேர்தலில் தோல்வியடைய பிரேமதாச விரும்பவில்லை எனவும் அவை தெரிவித்தன.

# பலாலி ராணுவ நடவடிக்கை தாக்கி மீளும் புதிய யுக்தியாம்

(கொழும்பு)

பலாலி முகாமின் கிழக்குப் புறமாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இரா ணுவ நடவடிக்கை தாக்கி விட்டு மீளும் யுத்த தந்திரோ பாயம் என சிறிலங்கா இரா ணுவ வல்லுனர்கள் தெரிவித் துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட் டுப்பாட்டிலுள்ள சில பகுதி களை கைப்பற்றி அதைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் இராணுவ திட்டத்தை மாற்றி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி களில் புலிகள் மீது தாக்குதல் நடாத்திவிட்டு இராணுவ முகாமிற்குத் திரும்பும் புதிய யுத்தியை இராணுவம் கைக் கொள்ளத் தொடங்கியுள்ள தாகவும் அவர்கள் தெரிவிக் கிறார்கள்.

இதன் ஒரு அம்சமாக நேற்று முன்தினம் பலாலி விமானப்படை முகாமிலிருந்து ஹெலிகப்டர் சகிதமும் தொண்டமனாறு பகுதியில் கப்பல்படையும் தாக்குதல் நடத்தியதாக இராணுவ வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தரைப்படை கப்பற் படை வான்படை என முப் படைகளும் ''ரணகண்டர்'' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கை யில் ஈடுபட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சை விடைத்தாள்கள் நாளை அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 7-ம் திகதி தொடக் கம் 17-ம் திகதி வரை நடை பெற்ற க. பொ. த (சா. த) பரீட்சையின் விடைத்தாள்கள் நாளைகப்பல்மூலம்கொழும்பி ற்குஅனுப்பிவைக்கப்படவுள்ள தாக யாழ். கல்வித்திணைக் கள வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புதிதாகப் பருத்தித் துறைதுறைமுகத்திற்குஎடுத்து வரப்படவுள்ள இரண்டு இழு வைப் படகுகளைக் கொண்டு வருகின்ற கப்பலிலேயே இவ் விடைத்தாள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (பா)

# சமாதான முயற்சியில் ஈடுபட்டால் சிங்கள விரோதி என்கிறார்கள்

## -தொண்டமான்

[நுவரெலியா]

நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஆக்கபூர்வமா னதும், நடைமுறைச் சாத்திய மான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது பத்திரி கைகளில் ஒரு பகுதி எனக்குச் சிங்கள விரோதி என்று பெயர் சூட்டியது என்றார் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான்.

நுவரெலியா மக்கள் தொ ண்டமானைப் பாராட்டிய வைபவம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைப்பு அதிகாரப் பரவலாக்கம், வட க்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவருக்கும் முஸ்லிம்களு க்கும் பாதுகாப்பு என்ற எமது திட்டத்தில் என்ன தவறு உள்ளது? என்று கேள்வி எழுப் பிய அவர் தீர்வுத் திட்டத் தைக் கரிசனையுடன் ஆராய் ந்து அமுல்படுத்தியிருந்தால் அப்பாவி மக்களின் உயிர்க ளைக் காத்திருக்கலாம் என் றார்.

# கடல் வளம் சார் கல்வி மேம்படுத்தல் அவசியம்

## - இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

கடலகவளம் சார் அறிமுகக் கருத்தரங்கு நேற்று யாழ் பல்கலைக் கழகத்தில் நடை பெற்றது. இக் கருத்தரங்கில் தமிழீழ கல்விக்கழகப் பொறுப் பாளர் திரு இளங்குமரன் அவர்கள் உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றும் போது; ''தமிழீழ பொருளா தாரத்தைக் குன்றச் செய்ய சிறிலங்கா அரசு பலவகையி லும் முயல்கிறது அரசின் தடை யினால் பின் தங்கிய எமது பொருளாதாரத்தைக் கட்டி யெழுப்ப வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

பாரிய தொழிற்சாலைகள் முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன இந் நிலையில் தமிழீழத்திலுள்ள இயற்கை வளமான கடல் வளத்தை மேம் படுத்த வேண்டும் கடல் வளம் சார்ந்த கல்வி மாணவர் களிடையே புகுத்தப்பட வேண் டும். எமது பொருளாதா ரத்தை மேம்படுத்த இது அவ சியமாகும்'' என்று குறிப்பிட் டார். தொண்டமனாறு வெளிக்கள நிலைய தலைவர் திரு. சின்னத்தம்பி தலைமை யில் நடைபெற்ற இக் கருத் தரங்கில் பல்கலைக் கழக விலங்கியற்துறை தலைவர் திரு. கணேசலிங்கமும் உரை யாற்றினார்.

7 ஆம். 8 ஆம் ஆண்டுகளுக் கான வாழ்க்கைத் திறன்கற் றல் நிகழ்ச்சித் தொகுதி நூலும் வெளியிட்டு வைக்கப் பட்டது.

# இடம் பெயர்வோர் நலன் விசேட கூட்டத்தில் ஆராய்வு

(சுன்னாகம்)

இராணுவ அனர்த்தங்களை யிட்டு தத்தமது இடங்களை விட்டு இடம் பெயரும் மக்க ளுக்கு வழங்கப்படவேண்டிய உடனடி சேவைகள், குறை தீர்க்கும் நடவடிக்கைகள் பற் றிய விசேட கூட்டமொன்று நேற்று சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை பிர தேசங்களின் உதவி அரச அதி பர்கள் மற்றும் அரச சார் பற்ற இணையங்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்ட இவ் அவசர ஆலோசனைக் கூட்டத்தில் பின்வரும் தீர் மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

அனர்த்தம் நடைபெறும் உதவி அரச அதிபர் பிரிவில், உ. அ. அதிபர் தலைமையில் உடனடியாக துயர்துடைக்கும் குழு ஒன்று கூட்டப்படவேண் டும்.

முதல் 3 நாட்கள் தொடக் கம் 7 நாட்கள் வரை உதவி அரச அதிபரே உணவு விநி யோகங்களை மேற்கொள் வார். இவருக்கு உதவியாக அவ்வப் பிரதேசத்துக்குரிய, அரசசார்பற்ற இணையத்தின் தலைமைக் குழு செயற்படும்.

குறிப்பிட்ட பாடசாலை கள், தற்காலிக இடம்பெயர்ந் தோர் முகாம்களாக மாற்றப் பட்டு, தங்கும் மக்களது உணவுப் பங்கீட்டு அட்டை கள் பெறப்பட்டு, அவ்வவ் இடம்பெயர்ந்தோர் முகாமுக் குரிய விசேட அடையாள

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஆட்சி நடாத்துவது தொண்டாவா? அரசா?

## - டி. எம். ஜெயரத்ன

(கொழும்பு)

இந்தியக் கடவுச் சீட்டு பெற்ற 42 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இன்று மலை யகத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர். இவர்களுக் கென வருடாந்தம் கோடிக் கணக்கான ரூபாக்களை அரசு செலவு செய்கிறது. இவர்களை திருப்பி அனுப்புவதற்கு அர ராங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என கண்டி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. டி. எம். ஜெயரத்ன சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்; அவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதி போன்ற கொடுப்பனவுகளை இந்தியா விற்கு அனுப்பி விட்டனர். இவர்களைத் திருப்பி அனுப்பு வதற்கு கப்பல் சேவை ஆரம் பிக்கும் வரை காத்திராமல் விமானம் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அமைச்சர் தொண்டமானின் வேண்டுகோளின் பேரில் தேர் தல்களின் போது கள்ள வோட்டு போடுவதற்காகவா இவர்களை அரசாங்கம் வைத் துக்கொண்டிருக்கிறது? இவர் களைத் திருப்பி அனுப்பினால் கோடிக்கணக்கான ரூபா மிஞ் சும் அப்பணத்தை நாட்டின் அபிவிருத்திக்கு பயன் படுத்த முடியும்.

மலையகத்தில் ஆடைதயா ரிப்பு தொழிறசாலை யொன்றை அமைப்பதற்கு காணியொன்றைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் மேற் கொண்ட முயற்சி அமைச்சர் தொண்டமானின் தலையீட்டி னால் தோல்வியடைந்துளளது இன்று ஆட்சி செய்வது தொண்டமானா? அல்லது அரசாங்கமா என மக்கள் கேட்கிறார்கள் என்றார்.

# மேலும் 4புக்காரா விமானம் கொள்வனவு செய்ய முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு ஆர்ஜன் ரீனா விடமிருந்து நான்கு குண்டுவீச்சு விமானங்களை வாங்கவுள்ளதாக சிறிலங்கா விமானப்படை அதிகாரி ஒரு வர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஆர்ஜன்ரீனா விடமிருந்து நான்கு புக்காரா விமானங்களைச் சிறிலங்கா அரசு கொள்வனவு செய்துள் ளமை தெரிந்ததே.

இந்த வகை விமானங்களின் பயன்பொருத்தம் தொடர் பாக விமானப் படையினரிடம் அதிருப்திநிலவுவதுதெரிந்ததே

கம்போடிய கமரூச் போராளிகளால்

# ஐ. நா. அமைதிப்படையினர் ஹெலியுடன் கடத்தல்

(பிலிப்பைன்ஸ்]

கம்போடியாவிற்கு அமைதி காக்கும் படையாக சென் றுள்ள ஐக்கிய நாடுகள் சபை யின் படைவீரர்கள் ஒன்பது பேரை அங்கு போரிட்டு வரும் கமரூச் போராளிகள் நேற்று பிடித்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் சென்ற யு. எல். யு - 13 என்ற ஹெலிக்கொப் டரும் கமரூச் போராளிகளால்

(4ஆம பக்கம் பார்க்க )

# பாலம் சேதமடைந்ததால் உணவு எடுத்துவர சிரமம்

## அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் பலாலி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த வல்லைப் பாலத்தினூடாக உணவுப் பொருள்களை ஏற்றி வர முடியாதுள்ளது என யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அறி வித்துள்ளார்.

நேற்று இது சம்பந்தமான செய்தி ஒன்றை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இச் செய்தியில் மேலும் உணவுப் பொருள்களை பருத்தித்துறை யிலிருந்து வழமையாக ஏற்றி வருகின்ற வல்லைப் பாலப் பாதை சேதமடைந்ததினால் நாங்கள் தற்பொழுது மாற்று வழிஒன்றினூடாகவே உண வுபபொருளகளை எடுத்துவர வேண்டிய நிலை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

## விண்ணப்ப முடிவு நீடிப்பு

1993 இல் ஆண்டு 6 போட் டிப் பரீட்சைக்கு தேசிய பாட சாலைகளுக்கு மாத்திரம் விண் ணப்பித்த மாணவர்கள் வேறோர் பாடசாலைக்கு விண்ணப்பிக்காமல் இருந்தால் அவர்கள் மாத்திரம் தாம் விரும்பும் மற்றொரு பாடசா லைக்கு விண்ணப்பிக்க வசதி செய்யும் முகமாக விண்ணப்ப முடிவு திகதி 22 - 12 - 92 வரைக்கும் நீடிக்கப்பட்டுள் ளது. என்பதைகல்வித்திணைக் களம் அறிவிக்கின்றது.

கூட்டுறவு சங்க கிளைக் குழுவிற்கு

# இளைய உறுப்பினர்களை தெரிவு செய்யப் பணிப்பு

ப. நோ. கூ. சங்கக் கிளை களிற்கு தெரிவு செய்யப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களில் இருவர் 18 வயதிற்கும் 35 வய துக்கும் இடைப்பட்டவர் களாக இருக்க வேண்டும் என புதிய கூட்டுறவுச் சங்க உப விதி கூட்டுறவு ஆணையாள ரினால் திருத்தி சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது தற் போது பதவியில் உள்ள கிளைக்குழு ஒன்றில் இத்தகை

[4ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் கூட்டணி அமைப்பதில் சுதந்திரக் கட்சி தீவிரம்

(கொழும்பு)

அடுத்த வருடம் நடைபெற விருக்கும் மாகாணசபை தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து பங்கு பற்றத் தீர்மானித்துள்ளது.

இதற்கான முடிவு கடந்த திங்களன்று இடம் பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது தொடர்பாக இதர ஐந்து எதிர்க்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கென ஐவரடங்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட வேண்டும் எனவும் இதற்கான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தை சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் விடுவதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலில் மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் அனைத்து தேர்தல்களிலும் மேற்படி ஐந்து எதிரணிக் கட்சிகளுடனும் கூட்டாகப் போட்டியிடுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கான அதிகாரத்தையும் இக்குழு கொண்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சென்ற முறை நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அவசர கால சட்டம் அமுல் நடத்தப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவும், இந்த அணியில் தொழிற் சங்கங்களையும் இணைக்கவும் முன்வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டம் கூடுதல், சுவரொட்டிகளை ஒட்டுதல், ஊர்வலம் செல்லுதல், பிரசாரம் செய்தல் என்பனவற்றிற்கு அவசர கால சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் அரசுக்கெதிரான பிரசாரக் கூட்டங்களை நாடளாவிய ரீதியில் நடாத்துவது என்றும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து குறிப்பிட்ட ஒரு தினத்தில் மட்டும் சுமார் 100 பிரசாரக் கூட்டங்களை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிறந்த தினத்திற்கு முதல் நாளான எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி மேற்படி எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து மாபெரும் பாதயாத்திரை ஒன்றையும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

### கஜமுகாசுர சங்காரம்

பிள்ளையார் கதையை முன்னிட்டு நடைபெறும் உற்சவங்களில் மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் இம்முறை முதன் முதலாக கஜமுகாசுர சங்காரம் நடைபெறவுள்ளது.


## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி. (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழிவிற்பனைக் குண்டு (புறோய்லர்) தொடர்புகொள்ளவேண்டியமுகவரி. பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்துமிடம்) திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம். (3409)

### தேவை

பாவிக்கப்பட்ட அல்லது புதிதான ரியூப் லைற்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்தும் இடம்), திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம். (3408)

### மற்சிகிச்சை நிலையம்

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிரில். கே. கே. எஸ். வீதி, கொக்குவில். பார்வையிடும் நேரம்; தினசரி 4-00 பி. ப.—6-00 பி. ப ஞாயிறு: 10-00 மு. ப. — 12-00 பி. ப. (3235)

### சோதிடம்

உங்கள் அன்புக் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டகரமான எண்களில் பெயரமைக்க விவாகப் பொருத்தம் பார்க்க, வெளியூர் ஜாதகம் எழுத— வேலணை ஜோதிடர் V. A. சிவராசா 1528 அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3820)

### விற்பனைக்கு

எமது சங்கத்தில் பாவிக்கப்பட்ட "றெமிங்டன்" தமிழ் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. பெற்றுக்கொள்ள விரும்புவோர் காரியாலய கடமை நேரத்தில் காலை 8.30-மாலை 5.00 மணிவரை பார்வையிட்டு கேள்விகோரலை நேரில் சமர்ப்பிககவும்.

பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(சி-5619)

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
(மருதனார் மடம் கோட்டம்)

### பொதுச் சபைக் கூட்டம்

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
காலம்: 23 12-92 புதன் காலை 9-00 மணி
விடயங்கள்
1) சென்ற கூட்ட அறிக்கை
2) 1992 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கை
3) புதிய நிர்வாகசபை தெரிவு
4) பதிவுகள் புதிப்பித்தலும் புதிய இலக்கம் வழங்குதலும்.

❋ அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்
(3813)

வெளியாகி விட்டது

### விழுதுகள் தொகுப்பு - 1

களமாடி சரித்திரமாகிய களநாயகர்கள் பற்றி போராளிகளால் எழுதப்பட்டு, "ஈழநாதம்" பத்திரிகையில் வெளியானவை.

அன்பளிப்பு -50/

கிடைக்குமிடம்:
1) தமிழ்த்தாய் புத்தகசாலை — யாழ்ப்பாணம்
2) தமிழருவி ,, ,,
3) சுடர் ,, ,,
4) பூபாலசிங்கம் ,, ,, (3812)

NEW ADMISSION FOR THE FULL - TIME POST - GRADUATE

NEW ADMISSION FOR THE FULL - TIME Diploma in English Language

ஒஸ்கா விளையாட்டுக் கழகம் நடாத்தும்

### இறுதியாட்ட உதைபந்தாட்டப் போட்டி

இவ்வாட்டத்தில் பங்கு கொள்ளும் கழகங்கள்
(1) தொடர்மாடி வி.க VS. சண்ஸ்ரார்
(2) சென்றோக் வி.க VS பாடும்மீன் வி. க.
போட்டிகள் 20 12 92 ஞாயிறு பி.ப 3.00 மணிக்கு கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும்.
(3821)

❋ அந்தியேட்டிக்குத் தேவையான 12" X 10" Reocpy புகைப்படங்கள்
❋ நினைவஞ்சலி, கல்வெட்டு, புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line Tone, Colour Blocks
❋ Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
❋ றபர் சீல்
❋ ஓவிய வேலைகள்
❋ விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.
(சி-5518)


## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-20

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். அரியாலைப் பகுதியில் எமது முகாமைச் சிறிலங்காப் படையினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

கார்த்திக் (தம்பு இராசப்பு உதயகுமார் -உதயகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு - யாழ்.)

1986 ஆம் ஆண்டு யாழ். ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வல்லி (பொன்னுத்துரை சாந்தகுமார் - குமரகோட்டம், கோண்டாவில் - யாழ்.)

1987 ஆம் ஆண்டு அச்செழுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சகிலா (றஜனி நவரட்ணம் - பெற்றா வீதி - மன்னார்)

ஊரெழுப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

தாஸ் (சின்னராசா சதீஸ்வரன் - அளவாவோடை, ஏழாலை மேற்கு - யாழ்.)

லோகேந்திரன் (ஐயாத்துரை லோகேந்திரன் - அச்செழு - யாழ்.)

ரவி (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலை மேற்கு -

யாழ்ப்பாண மாநகரசபை

பி. ப.—6-00 பி. ப ஞாயிறு:
10-00 மு. ப. — 12-00 பி. ப.
(3235)

## சோதிடம்

உங்கள் அன்புக் குழந்தைகளுக்கு அதிர்ஷ்டகரமான எண்களில் பெயரமைக்க விவாகப் பொருத்தம் பார்க்க, வெளியூர் ஜாதகம் எழுத— வேலணை ஜோதிடர் V. A. சிவராசா 1528 அரசடி றோட் கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(3820)

காலம்: 23 12-92 புதன் காலை 9-00 மணி

விடயங்கள்

1) சென்ற கூட்ட அறிக்கை
2) 1992 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கை
3) புதிய நிர்வாகசபை தெரிவு
4) பதிவுகள் புதிப்பித்தலும் புதிய இலக்கம் வழங்குதலும்.

❋ அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.

செயலாளர்

(3813)

யாழ்ப்பாணம்
2) தமிழருவி ,, ,,
3) சுடர் ,, ,,
4) பூபாலசிங்கம் ,, ,, (3812)

## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1993

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தை, இறைச்சிக்கடைகள், கோழி கடைகள் ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிட்ட காலங்களுக்கு, 01. 01. 1993 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன

கேள்விப்படிவம் பெறும் இறுதித் திகதி: 23. 12. 92 புதன்கிழமை பிற்பகல் 03. 00 மணிவரையும்.

கேள்வி ஏற்கும் திகதி : 24. 12. 92 வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணிவரையும்.

கேள்விப்படிவங்களை மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரடியாக நண்பகல் 12. 00 மணிக்கு முன்னதாக சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவக் கட்டணம் ரூபா. 100/-

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18. 12. 1992

வே. பொ பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

### அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகை காலம் | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப் பட்ட ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 01. கொட்டடிசந்தை | 1 வருடம் | 500.00 | 1000.00 | - |
| 02. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள் | | | | |
| 1. கடை இல 02 | 1 வருடம் | 2500.00 | 6200.00 | 112 50 |
| 2. கடை இல 03 | 1 வருடம் | 2500.00 | 5800 00 | 112 50 |
| 3. கடை இல 11 | 1 வருடம் | 2500.00 | 5050.00 | 112.50 |
| 03. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை | | | | |
| கடை இல 08 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200 00 |
| 4. கோழிக்கடை இல. 10 | 1 வருடம் | 2500.00 | 5000.00 | 200.00 |
| 5. அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | 1 வருடம் | 2500.00 | 10500.00 | 135.00 |
| 6. புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500.00 | 10000.00 | 200.00 |
| 7. புங்கன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 2500.00 | 12000.00 | 200 00 |

(சி-5612)

## NEW ADMISSION FOR THE FULL - TIME

### POST – GRADUATE DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1991 / 92

Applications are invited for the above course from Graduate teachers of English Application should be less than 50 years of age as at 1993 - 01 - 01.

A graduate with English as a subject for his / her degree should have a minimum of two years English Language Teaching experience. A graduate without English as a subJect should have a min mum of four year's experience.

The relevant application forms can be obtained from the Senior Asst. Registrar / Academic after payment of fees of Rs 10/- at the Finance Branch.

The candidates will be required to sit for a written test and will be summoned for an interview based on their performance in the written test.

Please forward the application through your Principal to Senior Assistant Registrar, Academic Branch University of Jaffna. Thirunelvely before 1993-01-05 The Admission test will be held on 1993-01-15.

Registrar
University of Jaffna
1992 - 12 - 18

(சி-5616

## NEW ADMISSION FOR THE FULL - TIME

### Diploma in English Language Teaching 1991 / 92

Applications are invited for the above course from non - graduate teachers of English. Applicants should be less than 50 years of age as at 1993 - 01 - 01

Candidates should have at least a credit pass in English in G. C. E. (O/L) with at least 3 passes in the G CE. (A / L) and should have a minimum of five year's. English Language Teaching experience. Candi-dates with trained teachers, certificates will also be considered for admission.

The relevant application forms can be obtained from the senior Asst. Registrar. Academic after payment of fees of Rs. 10/- at the Finance Branch.

The candidates wi'l be required to sit for a written test and will be summ oned for an interview based on their performance in the written test

Please forward the application throughyour Principal to Senior Assistant Registrar Academic Branch. University of Jaffna, Thirunelvely before 1993 - 01 - 05 The admission test will be held on 1993 - 01 - 15.

Registrar
University of Jaffna
1992 - 12 , 18

(சி-5617)

னர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

கார்த்திக் (தம்பு இராசப்பு உதயகுமார் -உதயகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு - யாழ்.)

1986 ஆம் ஆண்டு யாழ். ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

வல்லி (பொன்னுத்துரை சாந்தகுமார் - குமரகோட்டம், கோண்டாவில் - யாழ்.)

1987 ஆம் ஆண்டு அச்செழுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

சகிலா (றஜனி நவரட்ணம் - பெற்றா வீதி - மன்னார்)

ஊரெழுப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

தாஸ் (சின்னராசா சதீஸ்வரன் - அளவாவோடை, ஏழாலை மேற்கு - யாழ்.)

லோகேந்திரன் (ஐயாத்துரை லோகேந்திரன் - அச்செழு - யாழ்.)

ரவி (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலை மேற்கு - யாழ்.)

சந்திரன் (துரைராஜா சண்முகரத்தினம் - பண்டத்தரிப்பு - யாழ்.)

பவான் (கறுப்பையா தயாபரன் - பெரியமடு - மன்னார்)

குண்டுத்தம்பி (மகாலிங்கம் நாகேஸ்வரன் - நாகேஸ்வரன் வீதி. 7-ம் கட்டை, மல்லாகம் - யாழ்.)

ஆனந்தன் (உலகநாதன் முரளி - 639, கடற்கரை வீதி - யாழ்.)

ஜோண்சன்

சந்திரன் (செலஸ்ரின் தேவகுரு - நெடுந்தீவு)

கப்டன் பாரதி மாஸ்ரர் (கனகலிங்கம் ரவீந்திரன்- 170, கஸ்தூரியார் வீதி - யாழ்.)

மாவி [கந்தசாமி யோகேஸ்வரன் - 52/14, இன்பம் வீதி, வண்ணார்பண்ணை - யாழ்.]

இதே சம்பவத்தின்போது இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படை மற்றும் ஈ பி. ஆர். எல். எவ் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட -

தேசிகன் / குமார் [குணரட்ணம் ஜெயக்குமார் - 6/1, மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி - யாழ் ]

மாங்குளத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட துணுக்காய் வீதியைச் சேர்ந்த இளம் தமிழ்ப் பெண்.

யாழ் பொலிகண்டிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த -

கப்டன் கிர்மானி / கதிர்வேலன் [த. துரைராஜா சிவராஜ்குமார் - புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, நல்லூர் வடக்கு - யாழ்.]

லெப். கைலன் / கனியன் [சண்முகம் சக்தி விநாயகம் - மூதூர் - திருக்கோணமலை]

வீரவேங்கை ரகு

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5614)

### சிந்தனைக்கு

வேர்கள் வெட்டப்படாதவரை மரங்கள் துளிர் விடுவதுபோல மனத்தில் புதைந்துள்ள ஆசைவேரோடு பெயர்க்கப்படாதவரை துன்பம் மீண்டும்துளிர்த்து எழும். — கௌதம புத்தர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 20- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## யுத்தத்தை போதிக்கும் பௌத்த நூல்

சிங்களவரின் கைகளில் 'மகாவம்சம்' இருக்கும் வரை தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான ஒரு தீர்வு ஒன்றைச் சிங்களவர்கள் முன்வைக்கப் போவதில்லை. ஏனெனில் சிறிலங்காவிலுள்ள பௌத்தர்கள் கௌதம புத்தரின் போதனைகளை விட மகாவம்சத்திலுள்ள இதிகாசக் கதைகளுக்கே முன்னுரிமை கொடுக்கின்றனர். அதனையே பின்பற்றவும் செய்கின்றனர்.

இதேவேளை, சிங்களப் பேரினவாதத்தின் வேதமாக விளங்கும் மகாவம்சமோ தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும், இந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து குடியேறியவர்கள் என்றும் காட்ட முற்பட்டுள்ளது. அத்தோடு, சிங்களவர்கள் தமிழர்களைத் தோற்கடித்ததற்கான 'துட்டகைமுனுவின் வரலாற்றை' பெருமையோடு பேசிக் கொள்கின்றது. மேலும், அரசியலோடு பௌத்த பிக்குகளையும் இணைத்தும் வைத்துள்ளது.

அதாவது, புத்தர் பிரான் எவற்றையெல்லாம் துறந்து வந்தாரோ அவற்றையெல்லாம் மகாவம்சம் சிங்கள பௌத்தருக்குப் போதிக்கின்றது. அரசியற் சூழ்ச்சிகள், போர்கள், அதன்மூலம் கொலைகள், வெற்றிக் களியாட்டம் என்பனவற்றை மகாவம்சம் போதிக்கிறது.

இதனை வலியுறுத்துமாப்போல் அண்மையில் பெல்லன்வில ராஜ மகா விகாரையில் இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசிய தேசிய யுத்தவீரர் சங்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரோ மீண்டும் ஒருமுறை வற்புறுத்தியுள்ளார். தமிழருக்கு எதிரான போருக்கு மகாவம்சத்தை மீண்டும் துணைக்கிழுத்திருக்கின்றார், 'துட்டகைமுனு காலத்தில் பௌத்த குருமார்கள் இராணுவத்துடன் சேர்ந்து யுத்த களத்தில் இறங்கினார்கள். பிச்சா பாத்திரத்தில் பிச்சை எடுத்து இராணுவத்தினருக்கு உணவளித்தார்கள். இதன் மூலம் நாட்டைப் பாதுகாத்தார்கள். இதே போலவே வலகம்பா மன்னர் காலத்திலும் பௌத்த குருமார்கள் செயற்பட்டுள்ளார்கள்' எனவும் தெரிவித்தார்.

### இன்றைய சூழ்நிலையில் நிலவும்

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

ஒரு நாட்டினதும் அதன் சமூகத்தினதும் உண்மையான முன்னேற்றத்திற்கு அந்த சமூகத்தின் ஆரோக்கியம் மிகவும் அடிப்படையாகும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் பலரும் தமது சொந்த வீடுகளையும் இடங்களையும் விட்டு இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் பாடசாலைகளிலும் கோவில்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழுகின்ற சூழ்நிலையிலும், பல கால்நடைகள் விவசாயங்கள், வீட்டுத்தோட்டங்கள் அழிக்கப்பட்டும் கைவிடப்பட்ட நிலையிலும், மேலும் உணவு உற்பத்தியை இடையூறு செய்யும் விதத்திலும் தடை செய்யும் விதத்திலும் அரசாங்கம் திட்டமிட்டு விவசாயத்திற்கு அடிப்படைத் தேவையான எரிபொருள், பசளை போன்றவற்றை தடை செய்திருப்பதால் பாதிக்கப்பட்டுள்ள உணவு உற்பத்தியும் மற்றும் மீன்பிடித்தலுக்கு இடையூறுகளும் தடைகளும் விதிக்கப்பட்டுள்ளதாலும உலகெங்கும் பல நாடுகளிலும் பல பாகங்களிலும் குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் கர்ப்பிணிகளுக்கும் வழங்கப்படுகின்ற 'திரிபோஷா' போன்ற சத்துணவுகளும் கடந்தஇரண்டரை ஆண்டு காலமாக 'தடைசெய்யப்பட்டுள்ளதாலும்' ஏற்பட்டுள்ள 'உடனடியான'(Acute) 'இடைக்கால' நீண்ட கால (Long Term) பிரச்சினைகள் சிலவற்றைசுருக்கமாகப் பார்ப்போம்,

நிறைவுள்ள சத்துணவு மனிதனுடைய வாழ்வின் எந்தப் பருவத்திலும், பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை ஆரோக்கியமான வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது. என்பதில் எவருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது. சத்தான உணவு மனிதனுடைய ஆரோக்கியமான வாழ்விற்கு மாத்திரமல்ல அவனுக்கு ஏற்படக் கூடிய சில கொடிய நோய்களினால் ஏற்படும் அழிவுகளிலிருந்தும் காப்பாற்றப் பெரிதும் உதவுகிறது.

குழந்தை ஒன்று பிறக்கும் போதே அதற்கு ஒன்பதுமாத வயதாகிறது. சாதாரண சூழ்நிலையில் ஒரு ஆரோக்கியமான பெற்றோர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தை ஏறக்குறைய 3-3.5 கிலோ கிராம் எடையுள்ளதாக இருக்கும். ஆனாலும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஏறக்குறைய 2.5 கிலோ கிராம் எடையையே கொண்டிருக்கிறார்கள் மருத்துவ ரீதியில் (Clinically) 2.5 கி.கிராம் எடைக்குக் குறைந்த குழந்தைகளை 'எடை குறைந்த குழந்தைகள் (Low Birth Weight) என வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படையில் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று குழந்தை குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே தாயின் வயிற்றிலிருந்துஅதாவது குறிக்கப்பட்ட ஒன்பது மாதத்திற்கு முன்னராகவே (Premature Delivery) பிறப்பதனால் தாயின் வயிற்றில் குழந்தை இருக்கும் போது தாய்க்கு ஏற்படும் போஷாக்கு குறைவினாலும், நோய்களினாலும் குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாலும் Retarded Growth) குறைந்த நிறையுள்ள குழந்தைகள் பிறக்கின்றன.

### நிறைகுறைந்த பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள்:

இக்குழந்தைகளின் உடல் மெலிந்தும் உடல் வெப்பநிலை குறைந்தும், தாய்ப்பாலை உறிஞ்சிக்குடிப்பதற்கு சிரமப்படுவார்கள். இதனால் இவர்களுடைய இறப்பு வீதமும் அதிகரித்தே காணப்படுகிறது எதிர்காலத்திலும் இவர்களுடைய உடல் வளர்ச்சி வீதமும், மூளை வளர்ச்சிவீதமும் குறைந்தே காணப்படும் இதனால் இவர்களுடைய அறிவுத்தன்மை (Intellectual) குறைந்தே காணப்படும்.

### சாதாரண நிறையுடன் பிறக்கும் குழந்தைகளின் வளர்ச்சி

இவர்களுடைய வளர்ச்சி வீதமும் தொற்று நோய்களிலிருந்துகாப்பாற்றப்படும் தன்மையும் அதிகரித்தே காணப்படும் ஏறக்குறைய 3கி.கிராம் எடையுடன் பிறக்கும் குழந்தை முதலாவது ஆண்டு முடிவில் 6 தொடக்கம் 7கி.கிராம் வரையிலான எடையை எட்டும் அதன் பின்னர் 'வயதிற்கு' வரும் வரை ஒவ்வொரு வருடம் ஏறக்குறைய 2—2.5கி. கிராம் எடையைப் பெறுவார்கள்.

மருத்துவக் காரணங்களுக்காக 'குழந்தைகள்' என்பது (Paediatric Group) பிறந்த நாள் முதல் 12 வயது முடியும் வரை உள்ளவர்களை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. அதன் பின்னர் வயது வந்தவர்களாகிறார்கள். அதிலும் பிறந்ததிலிருந்து முதல் 12 மாதங்களையும் இன்பன்ஸி (Infants) என்றும் அதற்குள்ளும் முதல் 28 நாட்களையும் நியோனேட்ஸ் (Neonates) என்றும் மேலும் 12 மாதங்களிலிருந்து அறுபது மாதங்களை பாடசாலைக்கு போக முன்புள்ள குழந்தைகள் (Pre. School Child) என்றும் அதனையும் 12-36 மாதங்கள் வரையிலான குழந்தைகளை ஒரு பிரிவாகவும் (Early Pre School Child) என்றும் 37-60 மாதங்கள் வரையிலான குழந்தைகளை இன்னொரு பிரிவாகவும் (Late Pre-School Child) என்றும் மருத்துவக் காரணங்களுக்கும் சத்துணவு முறைகளுக்காகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

### குழந்தைகளுக்கான உணவுமுறை (Infant Feeding)

தாய்ப்பாலே மிகச்சிறந்த உணவாகும் இதற்கு மாற்றீடு எதுவும் கிடையாது. அதுவும் முதல் 3 மாதங்களுக்கு தாய்ப்பால் மிகவும் முக்கியமானதும் அடிப்படையானதுமாகும்

அனைத்து பாலூட்டி (Mammals) விலங்குகளும் எலியிலிருந்து யானை வரை சுறாஇனம் கூட பாலூட்டுகின்றது தாய்ப்பாலூட்டல் உலகத்தில் எல்லாப்பாகங்களிலும் எல்லா சமூகத்தினராலும் அனைத்து மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முறையாகும்.

பசுப்பால் குடித்தல் ஏறக்குறைய 11000 வருடங்களாக நடைமுறையில் இருந்தாலும் இந்த நூற்றாண்டிலேயே தொழில் நுட்ப வளர்ச்சியினால் பாலிலிருந்து தயாரிக்கப்படும் ஏனைய உணவுப் பொருட்களான பால்மாக்களும் மற்றைய உணவுப் பொருள்களும் புழக்கத்திற்கு வந்துள்ளன.

மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் படி வேறு எந்தவிதமான உணவுகளுமின்றி முதல் ஆறு மாதங்களுக்குக்கூட குழந்தைகளுக்கு தாய்ப்பால் மாத்திரமே போதுமானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்கு தாய்மார் கர்ப்பிணிகளாக இருக்கும் போதும், பின்பு தாய்ப்பாலூட்டும் போதும் போதியளவு சத்துணவு உண்டு அவர்கள் ஆரோக்கியமாக இருக்கவேண்டும்.

தாய்ப்பாலானது ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் தேவையான புரதச் சத்து, கொழுப்புச்சத்து, சீனிச்சத்து மற்றும் விட்டமின்கள், கனியுப்புக்கள், கல்சியம் என்பவற்றையும் வழங்குகின்றது. பசுப்பாலுக்கும் தாய்ப்பாலுக்கும் உள்ள அடிப்படையானதும் மிகமுக்கியமானதுமான வித்தியாசம்

**சீர்மாறன்**

என்னவென்றால், குழந்தைகளுக்கு தொற்றுநோய்கள் ஏற்படாமல் தடுக்க 'இமியுனோகுளோபிலின்' என்கிற நோய்த்தடுப்புப் புரதம் தாய்ப்பாலில் மாத்திரமே உண்டு. இதுவே குழந்தைகளில் நோய் எதிர்ப்புச் சக்தி மிகவும் குறைந்ததும் முதிர்ச்சியடையாத நிலையிலும் உள்ள குழந்தைகளுக்கு மிக மிக அத்தியாவசியமாகும். இது வேறு எந்த பால் உணவிலும் கிடையாது. மேலும் இதிலுள்ள புரதம், கொழுப்புச்சத்து, சீனிச்சத்து மற்றும் கனியுப்புப்பொருள்கள் என்பன சரியான விகிதாசாரத்தில் அமைந்துள்ளதும் இன்னுமொரு விசேட அம்சமாகும்.

(தொடரும்)

## உ.பி முன்னாள் முதல்வரை நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தின்முன்னாள் முதல்வர் கல்யாண் சிங்கும், அம் மாநிலத்தின் ஆறு உயர் அதிகாரிகளும் எதிர்வரும் ஜனவரி 19 ஆம் [illegible] நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியைப் பாதுகாப்பதாக உத்தரவாதம் அளித்திருந்த போதிலும் ஜூலை 27 ஆம் திகதி முதல் [illegible] யிலான சம்பவங்கள் இடம் பெற்றதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித் தாக நீதிபதிகள் கூறியுள்ளனர். நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டின் கீழ் உச்ச [illegible]

## இஸ்ரேல் வெளியேற்றிய 400 பேர் தற்போது பனிமலையில் தஞ்சம்

### லெபனானும் ஏற்க மறுப்பு

இஸ்ரேலில் இருந்து நாடு கடத்தப்பட்ட நானூறுபாலஸ்தீனியர்களும் பனி மூடிய மலைப் பகுதியில் தங்கியிருப்பதாகவும், அவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கக்குழு கம்பளியும், கூடாரங்களும் வழங்கியிருப்பதாகவும் அறி[illegible] இவர்கள் நானூறு பேரும் பனிமலையில் தங்கியிருந்தனர்.

இதேவேளை இந்த நானூறு பேரையும் வெளியேற்றிய இஸ்ரேலின் செயலை கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை இது தொடர் [illegible]

சியற் சூழ்ச்சிகள், போர்கள், அதன்மூலம் கொலைகள், வெற்றிக் களியாட்டம் என்பனவற்றை மகாவம்சம் போதிக்கிறது.

இதனை வலியுறுத்துமாப்போல் அண்மையில் பெல்லன்வில ராஜ மகா விகாரையில் இடம்பெற்ற பிரார்த்தனைக் கூட்டமொன்றில் பேசிய தேசிய யுத்தவீரர் சங்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரோ மீண்டும் ஒருமுறை வற்புறுத்தியுள்ளார். தமிழருக்கு எதிரான போருக்கு மகாவம்சத்தை மீண்டும் துணைக்கிழுத்திருக்கின்றார், 'துட்டகைமுனு காலத்தில் பௌத்த குருமார்கள் இராணுவத்துடன் சேர்ந்து யுத்த களத்தில் இறங்கினார்கள். பிச்சா பாத்திரத்தில் பிச்சை எடுத்து இராணுவத்தினருக்கு உணவளித்தார்கள். இதன் மூலம் நாட்டைப் பாதுகாத்தார்கள். இதே போலவே வலகம்பா மன்னர் காலத்திலும் பௌத்த குருமார்கள் செயற்பட்டுள்ளார்கள்' எனவும் தெரிவித்தார்.

மாதுளுவாவே சோபித தேரோவின் இப் பேச்சானது இன்று சிறிலங்கா தமிழருடன் நடத்தி வரும் போரில், சிங்கள மக்கள் மட்டுமல்ல பௌத்த பிக்குகளும் கலந்து கொள்ளவேண்டும் பிச்சை எடுத்தாகிலும் தமிழருக்கு எதிரான போரை நடத்தியே ஆகவேண்டும் என்று மகாவம்சம் போதிக்கின்றது என்பதேயாகும். மேலும், "புனித சின்னங்களுக்கு பூஜைக்குரிய பொருள்களைப் படைப்பதற்குபதில் இராணுவத்தினருக்குத் தேவையான பொருள்களைத் தாருங்கள்" என்ற அவரது கோரிக்கை அவரது போர் வெறியையும் காட்டுவதாகவே உள்ளது.

ஆனால் சிறிலங்காவிலுள்ள பௌத்தபிக்குகள் உண்மையிலேயே புத்தரின் போதனைகளைப் பின்பற்றுபவர்களாக இருப்பார்களே ஆனால், அவர்கள் போதிக்க வேண்டியது சாந்தியையும் சமாதானத்தையுமே ஒழிய போரையல்ல. போரினால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், துன்பங்களையும் கருணையுடன் நோக்க வேண்டுமே ஒழிய போரில் மற்றைய உயிர்களை வதைத்துப் பெறும் வெறியை பற்றியதல்ல.

ஆகையினால் இன்று நடைபெறும் யுத்தத்தின் துயரத்தைக் கண்டு அவர்களுக்கு நினைவில் வர வேண்டியது புத்தர் எவ்வாறு போரையும் உயிர் கொலையையும் வெறுத்தார் என்பதையே ஒழிய துட்டகைமுனுவும், எல்லாளனும் மோதிக்கொண்டதல்ல. அதேபோல். கலிங்கத்துப் போரில் அசோகச் சக்கரவர்த்திக்குக் கிடைத்த வெற்றியைப் பற்றி அவர்கள் எண்ணுவதைவிட அப்போரின் பின் அசோகச்சக்கரவர்த்திக்கு பௌத்த பிக்கு ஒருவர் வழங்கிய போதனையே இவர்களுக்கு ஞாபகம் வர வேண்டும்.

ஆனால், இது சாத்தியமாகப் போவதில்லை. மகாவம்சம் சிங்கள பௌத்தர்களின் 'வரலாறாக' இருக்கும்வரை இவர்கள் புத்தரின் போதனையையோ அன்றி, அவரது கோட்பாடுகளையோ கடைப்பிடிக்கப்போவதில்லை. இதேவேளை, இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடப் போவதுமில்லை. ஏனெனில், மகாவம்சம் சிங்களவர்களுக்குவெறியை ஊட்டுகின்றதே ஒழிய புத்தபிரானின் உயர்வான போதனைகளை ஊட்டி அவர்களை உண்மையான பௌத்தர்களாக வாழ வழி காட்டவில்லை.

சில கொடிய நோய்களினால் ஏற்படும் அழிவுகளிலிருந்தும் காப்பாற்றப் பெரிதும் உதவுகிறது.

குழந்தை ஒன்று பிறக்கும் போதே அதற்கு ஒன்பதுமாத வயதாகிறது. சாதாரண சூழ்

பாலை உறிஞ்சிக்குடிப்பதற்கு சிரமப்படுவார்கள். இதனால் இவர்களுடைய இறப்பு வீதமும் அதிகரித்தே காணப்படுகிறது எதிர்காலத்திலும் இவர்களுடைய உடல் வளர்ச்சி வீதமும், மூளை வளர்ச்சிவீத

னையும் 12-36 மாதங்கள் வரையிலான குழந்தைகளை ஒரு பிரிவாகவும் (Early Pre School Child) என்றும 37-60 மாதங்கள் வரையிலான குழந்தைகளை இன்னொரு பிரிவாகவும் (Late Pre-

படி வேறு எந்தவிதமான உணவுகளுமின்றி முதல் ஆறு மாதங்களுக்குக்கூட குழந்தைகளுக்கு தாய்ப்பால் மாத்திரமே போதுமானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்கு தாய்மார் கர்ப்பிணி

புச்சத்து, சீனிச்சத்து மற்றும் கனியுப்புப்பொருள்கள் என்பன சரியான விகிதாசாரத்தில் அமைந்துள்ளதும் இன்னுமொரு விசேட அம்சமாகும்.

(தொடரும்)

# உ.பி முன்னாள் முதல்வரை நீதிமன்றில் ஆஜராகப் பணிப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேசத்தின்முன்னாள் முதல்வர் கல்யாண் சிங்கும், அம் மாநிலத்தின் ஆறு உயர் அதிகாரிகளும் எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது. அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியைப் பாதுகாப்பதாக உத்தரவாதம் அளித்கருந்த போதிலும் ஜூலை 27 ஆம் திகதி முதல் டிசம்பர் 6ஆம் திகதி கட்டடம் இடிக்கப்பட்டது வரையிலான சம்பவங்கள் இடம் பெற்றதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித் தாக நீதிபதிகள் கூறியுள்ளனர். நீதிமன்றத்தை அவமதித்ததான குற்றச்சாட்டின் கீழ் உச்ச நீதிமன்றம் தன்னிச்சையாக இந்த ஆணையை பிறப்பித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை அயோத்தியாவில் சர்ச்சைக்குட்பட்ட பகுதியில் இருந்த கட்டடத்தை மீள அமைப்பது தொடர்பாக மத்திய, மாநில அரசுகள் தத்தம் கருத்தை ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்பாக உச்ச நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டுமென்றும், உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## பாராளுமன்றத்தின் முடிவுக்கு அயோத்தி விடப்பட வேண்டும்

- ராஜேஷ் பைலட் யோசனை

[டில்லி]

அயோத்தியா விவகாரத்தை பாராளுமன்றத்தின் தீர்வுக்கு விட்டுவிட வேண்டும் என்றும், பாராளுமன்றத்தின் முடிவுக்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டும் என்றும் மத்திய அரசின் தகவல் தொடர்பு துறை அமைச்சர் ராஜேஷ் பைலட் கூறியுள்ளார். நரசிம்மராவ் அரசின் மீது பாரதிய ஜனதாக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையி லாத் தீர்மானத்தின் விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்றம் எடுக்கும் முடிவை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு வரும் திங்களன்று நடைபெற இருப்பது தெரிந்ததே.

## மாநில அரசுகள் கலைப்பு அரசியல் பெரும் தவறு

- அ. தி. மு. க. எம். பி. வர்ணனை

[டில்லி]

உத்தரப் பிரதேச மாநிலத்தின் பாரதிய ஜனதா அரசு கலைக்கப்பட்டமை சரியான செயலே என்றாலும் ஏனைய மூன்று மாநிலங்களில் பதவியிலிருந்த பாரதீய ஜனதா அரசுகள் கவிழ்க்கப்பட்டமை ஒரு அரசியல் பெரும் தவறு என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான பி. ஜே. நாராயணன் கூறியுள்ளார்.

நரசிம்மராவ் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்விதம் தெரிவித்திருக்கிறார்.

## தலைவர்கள் மீது தாக்குதல் தடுக்க கடும் நடவடிக்கை வேண்டும்

-எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழ் நாட்டில் அரசுக்கு எதிராக இயக்கம் நடத்தும் அரசியல் கட்சித் தலைவர்களைத் தாக்குவோர் மீது மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் வலியுறுத்தியிருக்கிறார்.

சென்னையில் நேற்று முன்தினம் பொதுக்கூடம் ஒன்றில் பேசிய அவர், 'அண்மையில் ஜனதாக் கட்சித்தலைவர் தாக்கப்பட்டதைக் கண்டித்ததுடன் இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று கோரினார்.

## தேசிய முன்னணிக் கட்சிகள் வாக்கெடுப்பில் பங்கேற்காது

- வி.பி. சிங்

(டில்லி)

நரசிம்மராவ் அரசின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு வரும்போது தாம் வாக்களிப்பில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தேசிய முன்னணி கூறியுள்ளது.

காங்கிரஸ் கட்சியிலும், பாரதீய ஜனதாக் கட்சியிலும் நம்பிக்கை இழந்து போயிருப்பதால் தேசிய முன்னணியில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது என்றுதேசிய முன்னணியின் அமைப்பாளரும், முன்னாள் பிரதமருமான வி. பி. சிங் கூறியுள்ளார்.

## இஸ்ரேல் வெளியேற்றிய 400 பேர் தற்போது பனிமலையில் தஞ்சம்

லெபனானும் ஏற்க மறுப்பு

இஸ்ரேலில் இருந்து நாடு கடத்தப்பட்ட நானூறுபாலஸ்தீனியர்களும் பனி மூடிய மலைப் பகுதியில் தங்கியிருப்பதாகவும், அவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கக்குழு கம்பளியும், கூடாரங்களும் வழங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த நானூறு பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலில் இருந்து நாடுகடத்தப்பட்டதும், அவர்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட இஸ்ரேலிய பஸ்வண்டிகள் இஸ்ரேல் எல்லைகளை தாண்டி அவர்களை இறக்கி விட்டுத் திரும்பியது. எனினும் இவர்களை ஏற்றுக் கொள்ளதெற்கு லெபனான் அரசு மறுத்துவிட்டதையடுத்து இவர்கள் நானூறு பேரும் பனிமலையில் தங்கியிருந்தனர்.

இதேவேளை இந்த நானூறு பேரையும் வெளியேற்றிய இஸ்ரேலின் செயலை கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை இது தொடர்பாக இஸ்ரேலுடன் பேச்சு நடத்த விசேட தூதுக் குழு ஒன்றையும் நியமித்துள்ளது.

இந்த நானூறு பாலஸ்தீனியர்களும் அவர்களது தாயகப் பகுதிக்கு திரும்புவதும் அவர்களது பாதுகாப்பும் உறுதிப் படுத்தப்படாவிட்டால் மத்திய கிழக்கு சமாதான சேச்சுக்களை புறக்கணிக்க வேண்டி நேரிடலாம் என்றும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் கூறியுள்ளது.

## கிழக்கு ஜேர்மனியிலிருக்கும் ரஷ்ய துருப்புகள் வாபஸாகும்

(மொஸ்கோ)

1994 ஆம் ஆண்டு யூன் 30 ஆம் திகதிக்கிடையில் கிழக்கு ஜேர்மனியிலிருக்கும் தமது துருப்புக்களை முற்றாக வெளியேற்ற ரஷ்யா உறுதியளித்துள்ளது.

முன்னதாக வார்சோ ஒப்பந்தத்தின் பிரகாரம் ரஷ்ய துருப்புகள் ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டிருந்தன பின்னர் சோவியத்யூனியனின் ஜனாதிபதியாக இருந்த கொர்ப்பசேவ் கட்டம் கட்டமாக ஜேர்மனியில் இருந்து துருப்புகளை திருப்பிப் பெறுவதாக உறுதியளித்திருந்தார் என்பது தெரிந்ததே.

இதன்படி 1994 ஆம்ஆண்டு யூன் மாதத்தில் கிழக்குப்பகுதியில் இருக்கும் படைகள் முற்றாக வாபஸ் பெறப்படும்

## தென்கொரிய அதிபர் தேர்தலில் கிம் இல் சுங் வெற்றி பெற்றார்

[சியோல்]

தென்கொரியாவின் அதிபர் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியின் வேட்பாளரான கிம் இல் சுங் வெற்றி பெற்றுள்ளார். அதிபர் தம்மை எதிர்த்துபோட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கிம் டேயங்கை விட பதினெட்டு லட்சம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

தங்களது பொருளாதாரம் புதுப்பிக்கப்பட்டு வடகொரியாவுடன் மீண்டும் இணைவதான பேச்சுக்களை தொடர்வதற்கு வசதியாக தென்கொரிய மக்கள் வாக்களித்திருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஜப்பானின் கோரிக்கையை பாக். நிராகரிப்பு

(டோக்கியோ)

பாகிஸ்தான் அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கையில் சேர வேண்டுமென்று ஜப்பான்கேட்டுக்கொண்டதை பாகிஸ்தான் பிரதமர் நவாவ் ஷரிவ் நிராகரித்துள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நவாப் ஷரிவ் தனது நாட்டில் அணு ஆயுதங்கள் இல்லை என்று மீண்டும் கூறியுள்ளார்.

ஈழநாதம்

சுப்பிரமணியம் சுவாமியின்

# உண்ணாவிரதத்திற்கு எதிராக அ.தி.மு.க உண்ணும் போராட்டம்

[சென்னை]

ஜனதாதளத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி நேற்று நடத்த இருந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு எதிராக அண்ணா.தி.மு.க. உண்ணும் போராட்டம் நடத்தியதால் ஜனதா தளம் அதன் போராட்டத்தைக் கைவிட்டது.

ஜனதாதளம் தொண்டர்கள் சிலர் சென்னையிலுள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு எதிரே உண்ணாவிரதம் இருந்த போது அவர்களுக்கு எதிரே அண்ணா தி.மு. கழகத்தினர் உண்ணும் விரதத்தை மேற்கொண்டு கோஷமிட்டனர். இதனிடையே ஏற்பட்ட பதற்றத்தில் அண்ணா தி.மு கழகத்தைச் சேர்ந்த சுமார் 400 பேர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் ஆதரவாளர்களைத் தாக்கிய போது அவர்கள் ஓடவேண்டி நேர்ந்தது.

அண்ணா தி.மு.கழகத்தினர் உண்ணும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது அக்கட்சியைச் சேர்ந்த குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி பா.வளர்மதி முதலியோர் உண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர். அமைச்சர் திருமதி இந்திராகுமாரியும் உண்ணா விரதத்தைப் பார்வையிட்டார்.

சென்னைப் பொலிஸ் உண்ணா விரதப் போராட்டத்தை நடத்த இரு தரப்பினருக்குமே அனுமதி வழங்கியிருந்தனர். பெருமளவில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

உண்ணா விரதப் போராட்டத்தில் அசம்பாவிதங்கள் நடக்கும் என்பதை முன் கூட்டியே அறிந்திருந்தகால் உண்ணா விரதத்தில் தான் கலந்து கொள்ளவில்லை என்று டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

மாநில அரசு அண்ணா.தி.மு.கவின் தூண்டுதலின் பேரில் ஜனநாயக உரிமைகளைத் தர மறுக்கிறது என்று அவர் செய்தியாளரிடம் கூறினார். தமது தொண்டர்கள் அண்ணா. தி. மு. கழகத்தினரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் உண்ணா விரதத்தைக் கைவிட்டனர் என்றார். இது சம்பந்தமாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அசம்பாவிதத்தில் ஏழு ஜனதாத் தொண்டர்கள் காயமடைந்தனர்.

## 7-ஆம் ஆண்டு நினைவாக



மைந்தனாய் 05 — 07 — 1964

மாவீரனாய் 20 — 12 — 1985

### வீரவேங்கை கார்த்திக்

[இராசப்பு - உதயகுமார்] கோண்டாவில்

அன்பான கார்த்திக்!

காற்றாக நீ கலந்தாலும்
அனலாக புனலாக இணைந்தாலும்
உம்மை இனம் கண்டு கொள்கிறோம்
வெற்றிகள் எங்கு முழங்குகின்றனவோ
வீரம் எங்கு துலங்குகின்றதோ
அங்கே நீ விளங்குகின்றாய்
உன் சுவடுகளின் மேல்
ஆயிரம் ஆயிரம் சுவடுகள்
பதிவாகிச் செல்வதால்
மண்ணின் சிரிட பொலி தெளிவாய் கேட்கிறது
நம் தமிழீழமதில்

உதயகுமார் வீதி, பெற்றோர் சகோதரர்,

## பழைய மாணவர் ஒன்று கூடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் வைபவம் இன்று முற்பகல் பத்துமணிக்கு அருணாசல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும், விசேட அதிதிகளாக யாழ் மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச் செல்வன், வன்னிமாவட்ட விசேட தளபதி திரு. தீபன், தென்மராட்சித் தளபதி திரு. பரணி, யாழ். மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் திரு. ரேகா, தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கந்கண்ணா. தென்மராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். பழைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும். உதைபந்தாட்டம் வலைப்பந்தாட்டம் ஆகியனவும் இடம் பெறும். (மு)

## சுகாதார கருத்தரங்கு

(சுன்னாகம்)

வலிகாமம் - தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிமுகாம்களில் சுகாதார நிலையைப் பேணுமுகமாகச் சுகாதாரத் திணைக்களமும் சர்வோதயமும் இணைந்து சுகாதாரகருத்தரங்குஒன்றை நேற்று முதல் மூன்று நாட்களுக்கு நடாத்திவருகின்றன.

ஒவ்வொரு அகதி முகாம்களிலிருந்தும் மூன்று பேர் வீதம் கலந்துகொள்ளும் இக் கருத்தரங்குத் தொடர் நேற்றுக் காலை யாழ். மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திரு. பா. செல்வரத்தினம் அவர்களால் உடுவில் பிரதேச நிலையத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட சுகாதாரப்போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன், உடுவில் பிரதேச சுகாதார உத்தியோகத்தர் சிறீகாந்தா உட்பட பலர் கருத்துரை வழங்கிவருகின்றனர். (11)(09)

# யெல்சினின் சீன விஜயம் இடையில் கைவிடப்பட்டது

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் யெல்சின் தனது சீனப் பயணத்தை இடைநடுவில் கைவிட்டு மொஸ்கோ திரும்பியுள்ளார்.

ரஷ்யாவில் கடும் அதிகாரப் போட்டி நடந்துகொண்டிருப்பதாக அவர் பீகிங்கில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

புதிய சீர்திருத்த வாதிகளை அமைச்சரவையிலிருந்து அகற்றுவதற்காகப் புதிய பிரதமர் விக்ரர் சேர்னோ மைதின் முயற்சிப்பதாகவும் பொறிஸ் யெல்சின் மொஸ்கோவில் செய்தியாளருக்கு கூறினார்.

அமைச்சரவையில்பல மாற்றங்கள் செய்ய வேண்டும் எனப் பழமை வாதிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

அமைச்சரவைக்கு அமைச்சர்களை நியமிப்பது ரஷ்ய ஜனாதிபதி அல்ல. பிரதமர் தான் நியமனங்களைச் செய்கிறார். பிரதமரின் நியமனங்களை ரஷ்ய ஜனாதிபதி தனது ரத்து அதிகாரத்தைப் பாவித்துத் தடுக்கலாம்.

எறிகணை

நேற்று முன்தினம் இரவு 9 மணி தொடக்கம் நள்ளிரவு வரை தொடர்ச்சியாக மேற்படி பகுதிகளில் இருந்து இராணுவத்தினரால் 25 இற்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. இவை ஏழாலைப் பகுதிகளிலும், மற்றும் குப்பிளான். ஏழாலை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் சேதம எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை. (பா)

கிளாலி

களையும் பயன்படுத்தியதாகவும். விடுதலைப்புலிகள் இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதாகவும் தெரியவருகின்றது. ஆனாலும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பீரங்கிப் படகுகள் தப்பியோடிவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பலாலி

றன. இத்தாக்குதலால் புலிகளுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்த முடியவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

விசேட

விரைவில் பருத்தித்துறையை வந்தடைய உள்ள "குமண" கப்பல் ஒரு கிழமை அல்லது இரண்டு கிழமை தாமதித்தே கொழும்பு செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது வரைக்கும் மேற்படி நோயாளர்கள் மிகுந்த கஸ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளவர் என பாதிக்கப்பட்ட நோயாளர் மட்டத்தில் இருந்து அறியமுடிகின்றது.

## பாலஸ்தீனர் வெளியேற்றம் ஐ. நா. கண்டனம்

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 400க்கும் அதிகமான பாலஸ்தீனியர்களை வெளியேற்றிய இஸ்ரேல் அரசை ஐ. நா. பாதுகாப்புச் சபை கண்டித்துள்ளது.

வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியர்கள் உடனே திரும்ப இஸ்ரேல் வழி செய்ய வேண்டும் என நேற்று முந்தினம் இரவு நிறைவேற்றப்பட்ட ஐ. நா. பாதுகாப்புச் சபை கோரியுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவதற்காக ஒரு தூதுவரை அனுப்புவது பற்றிப் பரிசீலிக்குமாறு பாதுகாப்புச் சபை ஐ. நா சபைச் செயலாளர் பூட்டோர்ஸ் காலியைக் கேட்டுள்ளது

## ஆசிரியர் கௌரவிப்பு

யாழ். யோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இன்று காலை 11.00 மணிக்கு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமான ஒன்றுகூடல் வைபவம் ஒன்று இடம் பெறவுள்ளது இவ் ஒன்றுகூடலில் இம்முறை நடைபெற்ற ஆண்டு-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்தமைக்காக ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இளைய

யோர் இல்லாதவிடத்து கிளைக்குழுவில் ஏற்படும் வெற்றிடங்கள் இந்த வயதுடைய அங்கத்தவர்களைக் கொண்டு நிரப்பப்பட வேண்டும் எனவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேசமயம் ப. நோ. கூ. சங்க பணிப்பாளர் குழுவிலும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இருவர் இருக்க வேண்டும் எனவும் இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

இடம்பெயர்வோர்

அட்டை ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படும்.

எக்காரணம் கொண்டும், தனித் தனியே சமைக்க அனுமதிக்கப்படக்கூடாது. இதனால் சுகாதாரத்திற்கு பங்கமேற்படுமாதலால் பொதுச் சமையலே மேற்கொள்ளப்படும்.

முகாமின் சுகாதார தேவைகளை. பிரதேச மருத்துவ அதிகாரியும், மக்கள் சுகாதார கண்காணிப்பாளரும், இலங்கை செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து மேற்கொள்வர்.

அனர்த்தம் தொடரும் பட்சத்தில், பாடசாலைக் கல்விக்கு பங்கமேற்படாத வகையில், இடம்பெயர்ந்தோர் கைதடி, குடித்தனைப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும், தற்காலிக புகலிடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். அங்கு அவர்களுக்கு தொழில் செய்வதற்குரிய வசதிகள் அளிக்கப்படும்.

மேற்படி தீர்மானங்கள் நேற்று நடைபெற்ற இவ் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (11) (09)

# சுவாமி பின்னணியில் காங்கிரஸ் தலைமை

## - அ.தி.மு.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனதா தளத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் இயக்கத்துக்கு காங்கிரஸ் தலைமையே

பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம்பரிந்துரைக்கப் போவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## பிறந்த நாள் நினைவலைகள்

(20 - 12 - 92)



# வீரவேங்கை கார்த்திக்

[இராசப்பு - உதயகுமார்] கோண்டாவில்


அன்பான கார்த்திக்!

காற்றாக நீ கலந்தாலும்
அனலாக புனலாக இணைந்தாலும்
உம்மை இனம் கண்டு கொள்கிறோம்
வெற்றிகள் எங்கு முழங்குகின்றனவோ
வீரம் எங்கு துலங்குகின்றதோ
அங்கே நீ விளங்குகின்றாய்
உன் சுவடுகளின் மேல்
ஆயிரம் ஆயிரம் சுவடுகள்
பதிவாகிச் செல்வதால்
மண்ணின் சிரிடபொலி தெளிவாய் கேட்கிறது
நம் தமிழீழமதில்

உதயகுமார் வீதி,
கோண்டாவில்,
[3825]

பெற்றோர் சகோதரர்,
மைத்துனர்மார் நண்பர்கள்,
உற்றார், உறவினர்.

# மரண அறிவித்தல்



## திரு. ஞானப்பிரகாசம் றேமன் றெக்ஸ்

(மொட்டபாஸ் கராஜ் நிர்வாகி இராசாவின் தோட்டம்)

இல. 58 புதிய வீடமைப்புத் திட்டம் குருநகரைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் றேமன் றெக்ஸ் 18-12-92 இல் காலமானார். அன்னார் காலஞ் சென்றஞானப்பிரகாசம், கண்மணி ஆகியோரின் அன்பு மகனும், ஜசிந்தாவின் அன்புக் கணவரும், சுபா, சுரேன், சுஜி டயானா ஷரஞ்சா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவா, காலஞ்சென்ற ஸ்ரலின் ஞானரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற யோசவ், ராஜேந்திரம், றோஸ் மலர் ஆகியோரின் மருமகனும், செல்வம் - றஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் பூதவுடல் (20-12-92) இன்று பிற்பகல் 3 30 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/5618)

தகவல்
மனைவி ஜசிந்தா.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

தைக் கைவிட்டனர் என்றார் இது சம்பந்தமாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த அசம்பாவிதத்தில் ஏழு ஜனதாத் தொண்டர்கள் காயமடைந்தனர்.

...பத்தில் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட சுகாதாரப்போதனாசிரியர் திரு. வைத்தீஸ்வரன், உடுவில் பிரதேச சுகாதார உத்தியோகத்தர் சிறீகாந்தா உட்பட பலர் கருத்துரை வழங்கிவருகின்றனர். (11)(09)

# சுவாமி பின்னணியில் காங்கிரஸ் தலைமை

## - அ.தி.மு.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனதா தளத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் இயக்கத்துக்கு காங்கிரஸ் தலைமையே பொறுப்பு என்று மாநில அமைச்சர்களான திருமதி இந்திரா குமாரியும், மதுசூதனனும் தெரிவித்தார்கள்.

அண்ணா தி.மு.க. தலைமைச் செயலகத்தில் நேற்றுப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர்கள் இதனைத் தெரிவித்தார்கள்.

இந்தப் போக்கு நீடித்தால் காங்கிரஸ் கட்சிக்கும் அண்ணா தி.மு. கழகத்துக்கும் உள்ள தொடர்பை மீள் பரிசீலனை செய்யும்படி கட்சியின் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவிடம்பரிந்துரைக்கப் போவதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

## நாடக கலைஞர் சந்திப்பு

குமுதினியின் குமுறல் நாடகத்தில் பங்கேற்றகலைஞர்கள் அனைவரையும் இன்று காலை பத்து மணியளவில் இராசா, டீசல் அருகாமையில் இருக்கும் இல்லத்தில் சந்திக்கும்படி கலை பண்பாட்டுக் கழகத்தின் தீவகக் கோட்டத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்

## கப்டன் கிருபானி உருவப்படம் திறப்பு

கப்டன் கிருபானியின் உருவப்படத் திரை நீக்கமும், ஓராண்டு நினைவு அஞ்சலிக் கூட்டமும் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் கல்லியங்காடு சந்தியில் இடம் பெறவுள்ளது.

கப்டன் கிருபானியின் திருவுருவப் படத்தைத் திருக்கோணமலைத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு. வள்ளுவன் திரை நீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

## ஐ நா. அமைதி

எடுத்துச் செல்லப்பட்டது.

தமது தலைமை இவ் ஒன்பது பேரையும் விடுவிக்க உத்தரவு பிறப்பிக்காவிட்டால் தாம் அவர்களை கொன்று விடப் போவதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விக்கின்றன.

## பலாலி

றன. இத்தாக்குதலால் புலிகளுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்த முடியவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

## விசேட

விரைவில் பருத்தித்துறையை வந்தடைய உள்ள "குமண" கப்பல் ஒரு கிழமை அல்லது இரண்டு கிழமை தாமதித்தே கொழும்பு செல்லுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இது வரைக்கும் மேற்படி நோயாளர்கள் மிகுந்த கஸ்டத்தை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என பாதிக்கப்பட்ட நோயாளர் மட்டத்தில் இருந்து அறியமுடிகின்றது.

# கண்ணீர் அஞ்சலி

## மு. பாலசுப்பிரமணியம்

(முன்னாள் பிரசாரசெயலாளர், உபதலைவர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

அன்னார் நீண்டகாலமாக பல பதவிகளில் இருந்து தமிழ் ஆசிரியர்களின் நலத்துக்காக உழைத்ததை நினைவு கூருவதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(3822)

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்
இ. த. ஆ சங்கம்

அமரர்
வைத்திய கலாநிதி

## ஜே. பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த சபை

# கிறிஸ்மஸ் ஒன்றுகூடலும், கூட்டமும்

காலம்: 20-12-92 (இன்று) ஞாயிறு
பிற்பகல் 4-30 மணி

இடம்: யாழ். புனித பத்திரிசியார்
தொழில் நுட்ப நிறுவனம்

மேற்படி நிகழ்ச்சிகளில் அங்கத்தவர்களையும், புதிதாக அங்கத்தவர்களாக விரும்புவோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனித்தனியாக அழைப்புக்கள் எல்லோருக்கும் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம். இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்
ம. ஞானப்பிரகாசம்

செயலாளர்
சி. தார்சீசியஸ்

(சி-5620)

இதேசமயம் ப.நோ.கூ. சங்க பணிப்பாளர் குழுவிலும் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இருவர் இருக்க வேண்டும் எனவும் இதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

அங்கு அவர்களுக்கு தொழில் செய்வதற்குரிய வசதிகள் அளிக்கப்படும்.

மேற்படி தீர்மானங்கள் நேற்று நடைபெற்ற இவ் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (11) (09)

# பிறந்த நாள் நினைவலைகள்

(20 - 12 - 92)



## மேஜர் பாரதி

(சத்தியபாமா விஸ்வலிங்கம்)

மேஜர் பாரதி!
என் பிரிய சோதரி!
இன்று உனக்குப் பிறந்தநாள்.
நேரில் வாழ்த்துக் கூற நீயில்லை.
நெஞ்சோடு வாழும் நினைவுகளால் பயனில்லை,
நீண்ட தொலைவுக்கு,
தொலைவுக்கும் அப்பால்...
நினைவுகளை எறிகின்றேன்.
அவை மீண்டும் உன்பெயரைச் சொல்லியபடி,
என்னிடமே ஓடிவருகின்றன.
நீயும், கஸ்தூரியும்
பாதையும், இலக்கும் ஒன்றாகிய பயணிகள்.
கப்டன் கஸ்தூரி என் இரத்தக் கொடியில் பூத்தவள்
நீ என் நெஞ்சில் படர்ந்த கொடி.
இருவரையும அடுத்தடுத்துத் தொலைத்துவிட்டு,
உங்கள் நினைவுகளுடன் மட்டும் நான்.
பாரதி!
என் பிரிய சோதரியே!
இன்று உனக்குப் பிறந்தநாள்.
எனது வாழ்த்துக்கள் கேட்கிறதா?
மீண்டும் சந்திப்போம்.

உரெழு (3823) நந்தினி, கிருசனா, அம்மு.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 19.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7165

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;
36-8686, 26-9745, 24-5734, 28-2385, 24-5721

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;
26-4727, 24-5241 26-2668, 28-1901, 26-9992, 28-7261, 22-3611, 40-2677, 24-1250, 26 8936, 26-2745, 41 8432, 24-5015, 41-5015, 26-5190, 26-7068, 41-7693, 22-9127, 26-7187, 26-3518, 27-4289, 26 6417, 28-8444, 41-8626, 24-9390, 26-0769, 26-2414, 42-9112, 26-6075.